32

காதல் நிலை

மிஸஸ் நவமணி புத்தகத்தை மேஜையின் மேல் எறிந்துவிட்டு ஜன்னலின் பக்கமாகத் தன் பார்வைத் திருப்பினாள். அவள் விட்ட ஆழ்ந்த பெரு மூச்சிலிருந்தும், முகத்திலிருந்த ஏக்கத்திலிருந்தும் அன்று அவள் ஏதோ உள்ளக் கிளர்ச்சி கொண்டிருந்தாள் என்பது தெரிந்தது.

ஷேக்ஸ்பியரின் நாடகம் 'ஆன்டொனியும் கிளியோபாட்ராவும்' என்பதை அப்பொழுதுதான் படித்து முடித்தாள். அந்த மகத்தான காதல் நாடகத்தைப் படித்ததிலிருந்து ஏற்பட்ட மயக்கத்தில் எதிரில் இருந்த தெருவும், அதிலிருந்த போக்குவரத்தும் அவள் கண்களுக்கு ஒரு கனவுக்காட்சிபோல் தென்பட்டன. அப்போது ஏற்பட்ட மின்சார விளக்குகள் கூட நட்சத்திர ஜ்வாலை கொண்டிருந்தன. சரித்திரத்திலும் இலக்கியத்திலும் பிறந்து, காலத்தின் வெளியில் நடமாடும் காதல் உருவங்கள் அப்பொழுது அந்த தெருவிலே அவள் முன்னே வரிசை யாக நடந்து செல்வனபோல் இருந்தன.

அவள் அப்படித் தன்னையே மறந்து உட்கார்ந்து போயிருந்ததைச் சுந்தரம் கண்டார். வாழ்க்கைக் கரையில் வந்து மோதி மறையும் ஆசை அலைகள் போல அவளுக்கு பெருமூச்சுகள் கிளம்பிக் கிளம்பி நசித்தன. தன் முன்னெ சென்ற அந்த மின்னல் காட்சியைக் கண்டதால், நிலை குத்தியதைப்போல இருந்தது அவள் பார்வை.

விளக்குக்கூடப் போடாமல் அந்த அறையின் அரையிருளில் அவர்கள் மேஜையின் இருபக்கங்களிலும் உட்கார்ந்திருந்தார்கள். சடக்கென்று விளக்கைப் போட்டு அவளைத் திடுக்கிடச் செய்யக்கூடாதென்று, ஆசிரியர் சுந்தரம் நாசுக்காக, 'என்ன யோசிக்கிறீர்கள்?' என்று மெதுவாகக் கேட்டார்; வெகு நேரம் அப்படிப் பேச்சற்று இருட்டில் உட்கார்ந்திருப்பதன் அவதியை நீக்குவதற்குச் சூசனையாக அப்படிக் கேட்டார்.

பாரதமணி, 19.03.1939

மிஸஸ் நவமணி அப்படியே திடுக்கிட்டுப் போனாள். ஓர் அந்நியரின் முன்பு அவ்வளவு மெய்ம்மறதியாக உட்கார்ந்திருந்ததை அப்பொழு தான் அறிந்தாள்; வெட்கத்தால் முகம் சிவந்தது. ஆனால் தூய உணர்ச்சிகள் அவள் மனசில் பொங்கிய அந்த வேளையில் அவள் தன் எண்ணங்களை ஒளிக்க இஷ்டப் படவில்லை; முயலவும் இல்லை.

'இந்த அதிசயமான காதலின் முடிவைப்பற்றி எண்ணிக் கொண்டி ருந்தேன்!' என்று உடனே உள்ளதைச் சொல்லிவிட்டாள்.

'எந்தக் காதல்?' என்று சுந்தரம் கேட்டார்.

'கிளியோபாட்ராவின் காதல்தான்' என்று மெய்சிலிர்ப்புடன் சொன்னாள் நவமணி.

'கிளியோபாட்ராவின் ஆத்மாபிமானம் என்று சொல்லுங்கள்' என்று நவமணியைத் திருத்துபவர் போலக் கூறினார் சுந்தரம்.

'ஏன்?' என்று அவர் அந்தச் சந்தர்ப்பத்தில் கேலியாகப் பேசுவதை ரசிக்காதவள் போலக் கொஞ்சம் மனஸ்தாபத்துடன் கேட்டாள்.

'பிறரைவிட-ஆன்டொனியைவிட-தன்னைத் தான் அவள் அதிகமாகக் காதலித்தாள்'.

சுந்தரம் அந்தமாதிரிச் சொல்லுவதைக் கேட்டு மிஸஸ் நவமணி ஆச்சரியமடைந்து போனாள் என்பது அவளுடைய முகக்குறிப்பி லிருந்தே நன்றாகத் தெரிந்தது.

'நீங்களா அப்படிச் சொல்லுகிறீர்கள்? அவள் ஆன்டொனிக்காகத் தன் உயிரையே விடவில்லையா? அவளுடைய அபரிமிதமான காதலுக்கு அதுவே அத்தாட்சி அல்லவா?'

'அவளுக்குக் கற்பனை உண்டு; எதை எப்படிச் செய்யவேண்டு மென்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். சரியான காலத்திலும் செய்யத் தெரியும் திரிபுவன வீரர்களைத் தன் காலடியில் கிடக்கச் செய்ய வேண்டு மென்பது ஒன்றுதான் அவள் ஆசை. அவள் தன் ஆத்மசிம்மாசனத்தில் தனியாக உட்கார்ந்து கொண்டு வேடிக்கைதான் பார்த்தாள். சரித்திரத் திலேயே அந்த மாதிரிச் சித்திரத்தை வரைந்துவிடவேண்டும் என்பது அவளுடைய நோக்கம். அதற்காக அவள் தன் வலையை வீசி வல்லரசர் களை வீழ்த்தினாள். தன் ஆத்மாபிமானத்திற்கு அவர்களைப் பலி கொடுத்தாள். அவமானமின்றி இனிமேல் உயிர்வாழ முடியாது என்று கண்டதும் உலகத்தின் முன் சட்டென்று தன்னையே ஹத்தி செய்து கொண்டாள். ஷேக்ஸ்பியர் இந்த மனோபாவத்தை விசித்திர சக்தியுடன் வர்ணித்திருக்கிறார். இது காதலா?'

சுந்தரத்தின் பிரசங்கம் நவமணியைக் குழப்பி விட்டது. அவர் சொன்னது சரிபோலத் தோன்றலாயிற்று. ஆனாலும் தன் மனத்தில் ஏற்பட்ட அழகிய சித்திரத்தை அழிக்க அவளுக்கு மனசு வரவில்லை.

'பெண்ணின் இருதயத்தில்-அவள் காதலில்- உங்களுக்கு என்ன

அவ்வளவு அவநம்பிக்கை?'என்று புன்சிரிப்புடன் கேட்டாள்.

'அப்படி ஒன்று இருந்தால் அல்லவா நம்பிக்கை, அவநம்பிக்கை என்ற பேச்சு?'

மிஸஸ் நவமணி எம்.ஏ. பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தாள். புரொபஸர் சுந்தரம் அவளுக்கு டியூஷன் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்து நான்கு மாசங்கள் ஆகியிருந்தன. ரெவரெண்டு வில்லியம்ஸ் என்பவர் மூலமாகத்தான் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. சுந்தரம் இலக்கியம் கற்பிக்கும்முறையிலேயே ஒரு புதுமை இருந்தது.

'ஷேக்ஸ்பியர் நிபுணர் என்று பெயர் பெற்ற நீங்களே அவருடைய பிரதம கதாநாயகி ஒருத்தியை இப்படி இகழ்ந்து கூறுகிறீர்களே?'

'நான் ஷேக்ஸ்பியரின் கருத்துக்களை அறிந்த மட்டில், நான் சொன்னது தான் சரி என்று எனக்குத் தோன்றுகிறது. தம் சிருஷ்டி சக்தியின் பரிபூர்ண தசையிலல்லவா அவர் இந்த நாடகத்தை எழுதினார்? ஆகையால் அவர், தம் கருத்தைச் செவ்வனே வெளியிட்டிருக்கிறார். சரித்திரப்படி அவளுக்கு இருந்த குணத்தைக் கூடுதல் குறைவின்றிப் பெண்மையைப் பூர்ணமாக வெளியிட்டுக் காட்டி எழுதியிருக்கிறார்'.

'அந்தப் பெண்மைதான் என்ன என்று சொல்லுங்கள்!' என்று அவள் சட்டென்று குறுக்கிட்டுக் கேட்டாள்.

'அது என்னுடைய இலக்கியக் கொள்கை மட்டுமல்ல; அதுதான் அநுபவ சித்தமானதுங்கூட'.

'எது?'

'காதல் ஒரு கதை என்பது'.

சுந்தரம் தன்னைத் தூக்கினதுபோலத் துடித்தாள் நவமணி.

'ஏதோ ஒரு சில இடங்களில் வேண்டுமானால் காதல் வியர்த்தமாகப் போயிருக்கலாம். அதற்காக ஸ்திரீ புருஷ ஸ்வபாவத்திற்கே மூலாதார மான ஓர் உணர்ச்சியை இல்லையென்பது சரியா? அல்லது நியாயமா?' என்று நவமணி ஊக்கத்துடன் கேட்டாள்.

'அம்மா, நான் அறிந்ததை-உணர்ந்ததை-மட்டும் சொல்லுகிறேன். காதல் என்னும் கொள்கை ஓர் அழகிய கனவு-லட்சியம். கவிகள் அதைப்பற்றி வானளாவப் பாடலாம். ஆனால் அவ்வளவு உயர்தர உணர்ச்சிக்கு வாழ்க்கையில் இடமில்லை. டால்ஸ்டாய் என்ற மகான் கூட அந்த மாதிரியே அபிப்பிராயப்படுகிறார். ஆனால்... என்னை மன்னியுங்கள்-உங்கள் சொந்த அநுபவம் வேறுவிதமாக இருக்கலாம்-அதை மறந்துவிட்டேன்.'

உண்மையிலேயே இருவரும் தங்களை மறந்து விட்டார்கள். அறை யில் இருள் நன்றாகச் சூழ்ந்துவிட்டது. ஜன்னல் வழியாக ஒரு சிறு நிலாத்துண்டு மட்டும் அறைக்குள் விழுந்துகிடந்தது. மிஸஸ் நவமணி உள்ளம் உருகிவிட்டாள்.

'நாம் இருவரும் இன்றிரவு இவ்வளவு தூரம் பேசிய பிறகு நான் உங்களிடம் ஒரு பொய்யைச் சொல்ல விரும்பவில்லை. நீங்கள் இந்த நான்கு மாசங்களில் எனக்கு ஒரு நிரந்தரமான நண்பர் ஆகிவிட்டீர்கள். உங்களிடம் சொல்லிவிடுகிறேன், என் வாழ்க்கை ரகசியத்தை; என் மணவாழ்க்கை வெறும் சாவுநிலைக்குச் சமாதானந்தான்' என்று சொல்லும்பொழுதே அவளுடைய குரலில் கண்ணீர் அடைத்துக் கொண்டது.

'அம்மா! நீங்கள் அந்த மாதிரி நினைப்பதற்குக் காரணம், நீங்கள் வாழ்க்கையிலிருந்து அதிகம் எதிர்பார்த்ததுதான் – அந்த மணவாழ்க்கை யிலிருந்து நீங்கள் காதலை எதிர்பார்க்கக்கூடாது' என்று சுந்தரம் உணர்ச்சி யுடன் பேச ஆரம்பித்தான்.

'பின் கல்யாணமே செய்து கொள்வானேன்?'

'நான் என்ன சொல்லட்டும்? நான் இது மட்டும் சொல்லக்கூடும்: கல்யாணம் ஆகிற நிமிஷம், காதல் முடிவடைகிறது. ஆனால் காதலை நிலைநிறுத்த முயலுபவர்கள்கூட மரணத்தில் சரண்புகுந்துதான் அப்படிச் செய்ய முடியும். ரோமியோவும் ஜூலியத்தும் அப்படித் தான் செய்தார்கள். பார்பிரியாவும் அவள் காதலனும் அப்படித்தான் செய்தார்கள். அதியற்புதமான உயர்தரக் காதல்-எல்லாம், எங்கும்-அந்த மாதிரித்தான் இருந்திருக்கிறது'.

'கணவனும் பெண்ணும் ஒருமனப்பட்டால் காதல் ஏன் வளராது?'

'ஒருமனப்படுவதென்பது என்ன? இரண்டு மனங்கள் ஒன்றாவது தானே? ஒன்று மற்றொன்றில் லயப்படுவதுதானே? ஒரு ஸ்வபாவம் மற்றொன்றிற்குப் பரிபூர்ணமாகக் கீழ்ப்படிவதுதானே?'

'அதாவது சிறிய தன்மை பெரியதற்கு இடங்கொடுத்து, அதில் ஈடுபட்டுவிடுவதுதான்'.

'அதை யார் தீர்மானிப்பது? ஆராய்ந்து பார்த்தால் சிறியதுபெரியது என்ன? அபிப்பிராய பேதமாகத்தானே கடைசியில் முடிகிறது?'

'நீங்கள் உங்கள் வாழ்க்கையில் காதலைக் கண்டிருக்கிறீர்களா? – நான் கேட்கலாமா?' என்று அவள் அவரைத் திடீரென்று கேட்டாள்.

இந்த எதிர்பாராத கேள்வி அவரைக் கொஞ்சம் தூக்கிவாரிப் போட்டு விட்டது.

'உண்டு-அதாவது-அதைப்பற்றிச் சொல்லி என்ன பயன்?' என்று வார்த்தைகளை விழுங்கினார்.

'நீங்கள் என்னிடம் சொல்லக்கூடுமா அதைப் பற்றி?' என்று அவள் மறுபடியும் கேட்டாள்.

'ஆகா–அதற்கு என்ன ஆட்சேபம்? ஆனால் – அது–' என்று சுந்தரம் இழுத்து இழுத்துத் தன் முகத்தைப் பார்த்து அசடு தட்டுவதைக் கண்டதும் நவமணிக்கு ஆச்சரியம் உண்டாயிற்று.

அவர் முகத்தில், 'தெரியவில்லயைா உனக்கு?' என்று எழுதியிருந்தது.

அவள் வெட்கத்தால் மெய்சிலித்துப் போனாள். முகம் வெளுத்தது.

'ஆமாம், எப்பொழுது முதல் இந்தமாதிரி உங்கள் மனசு...?' என்று அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டே கேட்டாள்.

'நான் இந்த வீட்டில் காலடி எடுத்துவைத்த நிமிஷம் முதல்'.

'ஓ, கண்டதும் காதலா!' என்று நவமணி சிரிக்க முயன்றாள்.

'என்னைக் கேலி செய்யக்கூடாது!'

'ஆனால் உங்களுக்குத்தான் காதலில் நம்பிக்கை இல்லையே?'

'காதலில் நம்பிக்கை இல்லை என்பதல்ல; அது வாழ்க்கையில் இருக்க முடியாது என்பதுதான் என் அபிப்பிராயம் -அவ்வளவுதான்'.

'பின் ஏன் இவ்வளவு நாளும் வாயை மூடிக் கொண்டு இருந்தீர்கள்?'

'அதனால்தான்! என் நாவின் நுனியில் வந்து வந்து வெளியேறத் துடித்த அந்த ஒரு வார்த்தையை அதற்காகத்தான் வெளியே விடாமல் தடுத்து வைத்திருக்கிறேன்'.

'என் மனசை அறிய விரும்பினீர்களோ?'

'இல்லை, இல்லை. அதற்கு என்ன அவசியம் இருந்தது?'

'ஒகோ, நான் அவ்வளவு வெகுளியாக நடந்து கொண்டு விட்டேனோ?' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள். பிறகு திடீரென்று குரலை மாற்றிக் கொண்டு துடிதுடிப்புடன், 'நாம் இருவரும் ஒரு முயற்சி செய்தால் என்ன?' என்றாள்.

தான் சொல்லிவிட்டது என்ன என்பதை உணர்ந்ததும் வெட்கத்தால் அவள் முகம் சிவந்தது.

'ரோஸ், இல்லை! காதல் என்பது இப்பொழுது இருப்பதுதான். இதற்குமேல் போகக்கூடாது. ஓர் அடிகூட இதற்குமேல் எடுத்து வைக்கக்கூடாது. காதல் கரையற்றது, கட்டற்றது என்பது மட்டுமல்ல. வார்த்தையிலோ, செயலிலோ அதற்கு ஒரு கரை ஏற்படக்கூடாது; நிர்ணயம் கூடாது. அதுமனசில் மரணமின்றி வாழவேண்டும். அப்பொழுதுதான் ரோஸ், உன் அழகு நித்திய யௌவனமாக இருக்கும்; என் காதலும் அழியாது; மகாகவி 'கீட்ஸி'ன் வாக்கு நினைவிருக்கிறதா? 'வாலிபனே, எந்நாளும் நீ காதலித்துக்கொண்டிருப்பாய்; அவளும் அப்படியே அழகுருவாக இருப்பாள்' என்று அவன் இரண்டு சிலைகளைப் பார்த்துச் சொன்னதுதான் உண்மை'.

'ஆனால் அது எங்கே இருக்கிறது? இங்கு வாழ்க்கையில் எனக்கு ஒரு பிடிப்பு வேண்டுமே?'

'வாழ்க்கையில் பிடிப்பு வேண்டாம், ரோஸ். இப்படியே இருப்போம், போதும். அதுதான் காதல் நிலை!'

'கால் பாவாது நீரோட்டத்தில் நான் எப்படி நிலைப்பது?'

'காதலில் கால் பாவினால், வெள்ளம் வடிந்து போகும். காதல்

மனத்தின் பெருக்கிலிருந்து செயலென்னும் மணல் தரைக்கு வந்தால் இருக்கிற இடம் தெரியாமல் வறண்டுவிடும். அது எப்போதும் உடல் சம்பந்தப்பட்ட மட்டில் தூரத்துப் பச்சையாகவே இருக்க வேண்டும். நெருங்கினால் அந்த மோகனக்கனவு கலைந்துவிடும். பரஸ்பர ஆலிங் கனத்தினால் இருவர் சேர்ந்து கட்டிப்பிடித்துக் கண்டுவிட முயலும் மாய அழகு தப்பி ஓடிவிடும். வெறும் உடல்கள்தாம் நிற்கும். பரஸ்பரம் உடனே ஏமாற்றமும் வெறுப்பும் தோன்றும்'.

'நீங்கள் சொல்வது உண்மைபோலப் படுகிறது; ஆனால் அந்த மனோபாவ நிலையில் எனக்கு ஆறுதல் ஏற்படாது'.

'கலையில், கவிதையில் உங்களுக்கு ஆறுதல் ஏற்படவில்லையா?'

'அதுபோலத்தானா இது?'

'ஆமாம், காதலும் உண்மையைப் போலவும் அழகைப்போலவும் ஒரு கற்பனை!'

'உடல் இன்பம்?'

'அது வேறு; சாசுவதமல்ல அது'.

'அது இயற்கையல்லவா?'

'இயற்கைதான்; ஆனால் அது மட்டும் நீடித்த சுகம் அளிக்காது!'

'பின் என்னதான் வாழ்க்கை?'

'சுக துக்கம் கலந்த அநுபவந்தான்; வேறொன்றும் இல்லை'.

•